# கூட்டுறவுச் சங்கங்களின்
# மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம்,
# நீலகிரி மாவட்டம்

முகவரி : பிளாக் – IV மாவட்ட ஆட்சியர் அலுவலக கூடுதல் வளாகம், பிங்கர் போஸ்ட், உதகமண்டலம். நீலகிரி மாவட்டம் – 643 006

இணையதள முகவரி: **http://www.nlgdrb.in**

மினனஞ்சல் முகவரி: **nlgdrb2019@gmail.com**

**விளம்பர எண்: 1/2019** **நாள்: 26.08.2019**

நீலகிரி மாவட்டத்தில், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டில் செயல்படும் கீழ்காணும் வகை கூட்டுறவு சங்கங்களில் காலியாக உள்ள உதவியாளர் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்புவதற்காக இந்திய குடியுரிமையுடைய, கீழ்காணும் தகுதி பெற்ற ஆண்/பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் http://www.nlgdrb.in என்ற இணையதள முகவரியில் மட்டுமே (Online) 05.10.2019 பிற்பகல் 5.45 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

| வ.எண் | சங்கங்களின் வகை | பதவி | காலிப் பணியிட எண்ணிக்கை | பணியிடத்திற்கான சம்பள விகிதம் (தற்போதுள்ளபடி) குறைந்தபட்சம், அதிகபட்சம் |
|---|---|---|---|---|
| 1. | நகர கூட்டுறவு வங்கி | உதவியாளர் | 11 | ரூ.11900– ரூ.32450 |
| 2. | தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் | உதவியாளர் | 16 | ரூ10050–ரூ54000 |
| 3. | மாவட்ட கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் | உதவியாளர் | 2 | ரூ.5500 – ரூ.14000 |
| 4. | பணியாளர் கூட்டுறவு கடன் சங்கங்கள் | உதவியாளர் | 15 | ரூ.15000 – ரூ.47600 |
| 5. | பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் | உதவியாளர் | 1 | ரூ.10500–ரூ.22930 |

<u>**ஒட்டுமொத்த 45 பணியிடங்களுக்கான வகுப்புவாரி ஒதுக்கீடு**</u>

| | | |
|---|---|---|
| பொதுப்பிரிவு | : | 14 |
| பிற்படுத்தப்பட்டோர் | : | 11 |
| மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் | : | 09 |
| பிற்படுத்தப்பட்டோர்(முஸ்லீம்) | : | 02 |
| ஆதி திராவிடர் | : | 07 |
| ஆதிதிராவிடர் (அருந்ததியினர்) | : | 02 |

குறிப்பு:—

1) காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை மாறுதலுக்குட்பட்டது.

2) இத்தெரிவிற்கு, நடைமுறையில் உள்ள தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வுக்கு பின்பற்றப்படும் இடஒதுக்கீடு மற்றும் இனசுழற்சி முறை ஒட்டுமொத்த நியமனத்திற்கும் பின்பற்றப்படும்.

3) ஆதரவற்ற விதவை மற்றும் முன்னாள் இராணுவத்திற்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட காலிப்பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணிநிபந்தனைகள்) சட்டம் 2016, சட்டப்பிரிவு 26(2) மற்றும் 27(சி) ஆகியவற்றிற்கு உட்பட்டு நிரப்பப்படும்.

அ. மேற்படி சம்பள விகிதம் மற்றும் இதரப் படிகள் மேற்குறிப்பிட்ட கூட்டுறவு சங்கத்தின் பணியாளர் பணிநிலை குறித்த சிறப்புத் துணை விதிகளுக்குட்பட்டு அமையும்.

ஆ. தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் அவர்களுக்கு ஒதுக்கப்படும் சம்பந்தப்பட்ட கூட்டுறவு சங்கங்களின் துணைவிதிகளுக்குட்பட்டு பணியாற்ற வேண்டும்.

இ. தேர்வில் கலந்து கொள்ளும் போது கடைபிடிக்கப்பட வேண்டிய விதிமுறைகள் குறித்த விபரங்கள் தேர்வு நுழைவுச் சீட்டில் தெரிவிக்கப்படும்.

**1.முக்கிய நாட்களும் நேரமும்:**

| | | |
|---|---|---|
| 1. | பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பதிவேற்றம் செய்யப்பட வேண்டிய கடைசி நாள் | 05.10.2019 பிற்பகல் 5.45 மணி வரை |
| 2. | எழுத்துத் தேர்வு நடைபெறும் நாள் | 24.11.2019 (10.00 முற்பகல் முதல் 1.00 பிற்பகல் வரை) |

**தகுதிகள்:**

**அ. வயது**

i) விண்ணப்பதாரர் 18 வயது பூர்த்தியடைந்தவராக இருக்க வேண்டும் (அதாவது 01.01.2001 அன்றோ அதற்கு முன்னரோ பிறந்தவராக இருக்க வேண்டும்).

ii) விண்ணப்பதாரர்கள் 01.01.2019 அன்று கீழ் கண்ட வயதினை பூர்த்தி செய்தவராக இருக்கக் கூடாது.

| | | |
|---|---|---|
| 1) | ஆதி திராவிடர், அருந்ததியர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) மற்றும் இவ்வகுப்புகளை சார்ந்த முன்னாள் இராணுவத்தினர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் | வயது வரம்பு இல்லை |
| 2) | பிற வகுப்பினர் (OC) | 30 வயதுக்கு மிகாமல் இருக்க வேண்டும். |
| 3) | அனைத்து இனத்தைச் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் | வயது வரம்பு இல்லை |
| 4) | பிற வகுப்பினைச் (OC) சார்ந்த முன்னாள் இராணுவத்தினர் | 48 வயது மிகாமல் |
| 5) | பிற வகுப்பினைச் (OC) சார்ந்த மாற்றுத் திறனாளிகள் | 40 வயது மிகாமல் |

**ஆ) கல்வித் தகுதி :** ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு (Any Degree ) (10+2+3 pattern) மற்றும் கூட்டுறவுப் பயிற்சி

- பல்கலைக் கழகங்களால் வழங்கப்படும் பட்டப்படிப்பிற்குப் பதிலாக, பதினைந்து ஆண்டுகள் இராணுவத்தில் பணிபுரிந்தவர்களுக்கு இராணுவத்தால் வழங்கப்படும் பட்டப்படிப்பு சான்றிதழ் பெற்றுள்ள முன்னாள் இராணுவத்தினர்களும் விண்ணப்பிக்கலாம். ஆனால் அவர்கள் பள்ளி இறதித் தேர்விலும் (SSLC) மேல்நிலைக் கல்வியிலும் (HSC) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

- கூட்டுறவுப் பயிற்சி பெற்றவர்கள் மற்றும் 2019–2020 ஆம் ஆண்டில் கூட்டுறவு மேலாண்மை நிறுவனங்களின் வாயிலாகவோ, தொலைதூரக்கல்வி வாயிலாகவோ அல்லது நேரடியாகவோ கூட்டுறவுப் பட்டயப்பயிற்சி பயின்றுவரும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம். கூட்டுறவுப்பயிற்சி பெற்று வரும் விண்ணப்பதாரர்கள் இத்தேர்வுக்கு விண்ணப்பிக்கும் போது அவர்கள் கூட்டுறவு பட்டயப்படிப்பு படித்து வருவதற்கான (Bonafide Certificate) சம்பந்தப்பட்ட கல்வி நிலையத்தின் சான்றுடன் விண்ணப்பிக்கலாம். சம்பந்தப்பட்ட கூட்டுறவுப் பயிற்சி குறித்த விரிவான விபரங்கள் அடங்கிய பதிவாளர் அவர்களின் சுற்றறிக்கை எண் 29/2013 நாள் 18.07.2013 மாவட்ட ஆள் சேர்ப்பு நிலைய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

- விண்ணப்பதாரர்கள் பள்ளி இறதி வகுப்பு அல்லது மேல்நிலைப் படிப்பு அல்லது பட்டப்படிப்பின் போது தமிழ் மொழியை ஒரு பாடமாக படித்துத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

- கணிணிப் பயன்பாட்டில் அடிப்படை அறிவு பெற்றிருத்தல் வேண்டும்.

**இ) பொது**

- விண்ணப்பதாரர்கள் பிற மாநிலத்தவர்களாக இருக்கும் பட்சத்தில் அவர்கள் எந்த வகுப்பை சார்ந்தவர்களாக இருப்பினும் பிற வகுப்பினராகவே (OC) கருதப்படுவர்.

- "ஆதரவற்ற விதவை" என்பது அனைத்து வகையிலிருந்தும் பெறும் மொத்த மாத வருமானம் ரூ.4000/–க்கும் (ரூபாய் நான்காயிரம் மட்டும்) குறைவாகப் பெறுகின்ற ஒரு விதவையைக் குறிப்பதாகும். இவ்வருமானம், குடும்ப ஓய்வூதியம் அல்லது தொழிற்கல்வி பெற்றவர்களின் சுயதொழில் ஈட்டும் வருமானம் உள்ளிட்ட மற்ற வருமானங்கள் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும். இத்தகைய விண்ணப்பதாரர்கள் உரிய வருவாய் கோட்டாட்சியரிடமிருந்து நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் சான்றிதழைப் பெற்று சமர்ப்பிக்க வேண்டும். விவாகரத்துப் பெற்றவர், கணவனால் கைவிடப்பட்டவர் ஆதரவற்ற விதவையாகக் கருதப்படமாட்டார். மறுமணம் புரிந்தவர் ஆதரவற்ற விதவையாகக் கருதப்படமாட்டார்.

**3. விண்ணப்ப கட்டணம் :**

அ) விண்ணப்ப பதிவு மற்றும் எழுத்துத் தேர்வுக்கான கட்டணம் ரூ.250/– ஆகும்.

ஆதி திராவிடர், பழங்குடியினர், அனைத்துப் பிரிவையும் சார்ந்த மாற்றுத்திறனாளிகள், அனைத்துப் பிரிவையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் ஆகியோருக்கு இக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள மாற்றுத் திறனாளிகள், மாற்றுத்திறனாளிகள் துறை அலுவலரிடமிருந்து சான்றிதழும், மருத்துவ சான்றிதழும் பெற்றிருக்க வேண்டும். ஆதரவற்ற விதவைகள் வருவாய் கோட்டாட்சியரிடமிருந்து (RDO) சான்று பெற்றிருக்க வேண்டும்.

**அகல்நிலை (Offline)**

மேற்படிக்கட்டணம், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் தலைமையகம் அல்லது கிளைகளில் நேரடியாக செலுத்தப்பட்டு, அவ்வாறு செலுத்தப்பட்ட விண்ணப்பக் கட்டண இரசீதில் (Candidates copy of the chalan) உள்ள Journel ID என்ற எண்ணை விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்தில் அதற்கென்று ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் குறிப்பிட்டு விண்ணப்பக் கட்டணம் செலுத்திய இரசீதை (Candidates Copy of the pay- in-slip) scan செய்து பதிவேற்றம் (upload) செய்ய வேண்டும்.

**நிகல்நிலை (Online)**

தேர்வுக் கட்டணத்தை online மூலம் State Bank of India இணையதளத்தில் உள்ள "SBI Collect" என்ற சேவையைப் பயன்படுத்தியும் செலுத்தலாம். "SBI Collect"என்ற சேவையைப் பயன்படுத்தி விண்ணப்ப கட்டணம் செலுத்துவதற்கான வசதி (Link to the "SBI Collect" service in the State Bank of India online payment portal) மாவட்ட ஆள் சேர்ப்பு நிலைய இணையதளத்திலும் கொடுக்கப்பட்டிருக்கும். Online மூலம் மேற்குறிப்பிட்டவாறு விண்ணப்பக் கட்டணத்தை செலுத்தி முடித்த பின்னர் திரையில் தோன்றும் இரசீதினை பிரின்ட் எடுத்துக் கொள்வதுடன் அங்கே திரையில் தோன்றும் DUA—எனத் தொடங்கும் எண்ணை (SBI CollectReference Number) குறித்து வைத்துக் கொண்டு அந்த எண்ணை விண்ணப்பத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் குறிப்பிட வேண்டும்.

இணையவழி கட்டணம் செலுத்தும் போது ஏற்படும் இடர்பாடுகளுக்கும் தோல்விகளுக்கும் மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம் பொறுப்பேற்காது.

ஆ) மேற்கண்ட நடைமுறைகளைப் பின்பற்றி Online மூலம் பணம் செலுத்தும் விண்ணப்பதாரர்கள் DUA ... எண்ணை பிறரிடம் பகிரக் கூடாது. அதேபோல் மத்திய கூட்டுறவு வங்கியின் Journel ID ஐ பிறரிடம் பகிரக் கூடாது. ஒரே DUA ... எண்/ Journel ID எண் ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்களில் இருந்தால் அந்த விண்ணப்பங்கள் அனைத்தும் நிராகரிக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை http://www.nlgdrb.in என்ற இணையதளம் மூலம் **05.10.2019 மாலை 5.45 மணிவரை** பதிவேற்றம் செய்யலாம்.

இ) கட்டணம் செலுத்தும் முறையை எந்த நேரத்திலும் மாற்றியமைக்கும் உரிமை மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையத்திற்கு உண்டு.

ஈ) ஒருமுறை செலுத்தப்பட்ட விண்ணப்பக் கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

**4) விண்ணப்பிக்கும் முறை**

அறிவிக்கப்பட்டுள்ள காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்ப படிவம் http://www.nlgdrb.in என்ற இணையதளம் மூலம் மட்டுமே பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்யும் முன் கீழ்கண்டவற்றை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

அ) விண்ணப்பப்படிவங்கள் இணையதளம் மூலம் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

ஆ) விண்ணப்ப படிவங்களுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவைகளும் அவற்றிற்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் ஸ்கேன் செய்யப்பட்டு பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

i) விண்ணப்பதாரரின் புகைப்படம் – 50kb அளவுக்கு மிகாமல் (jpeg or jpg format)

ii) விண்ணப்பதாரரின் கையொப்பம் – 50kb அளவுக்கு மிகாமல் (jpeg or jpg format)

iii) விண்ணப்பதாரரின் சாதி சான்றிதழ் – 200kb அளவுக்கு மிகாமல் (pdf file)

iv) மாற்றுத் திறானளிச் சான்றிதழ் (மாற்றுத் திறனாளிகள் மட்டும்) – 200kb அளவுக்கு மிகாமல் (pdf file)

v) ஆதரவற்ற விதவை சான்றிதழ் (ஆதரவற்ற விதவைகள் மட்டும்) – 200kb அளவுக்கு மிகாமல் (pdf file)

vi) கூட்டுறவு பட்டயப் பயிற்சி சான்றிதழ் – 200kb அளவுக்கு மிகாமல் (pdf file)

vii) மத்திய கூட்டுறவு வங்கி மூலம் செலுத்தப்பட்ட விண்ணப்பக் கட்டண இரசீது (Candidates Copy of the pay- in- slip) - 100kb அளவுக்கு மிகாமல் (jpeg or jpg format)

மேற்குறிப்பிட்ட ஸ்கேன் செய்யப்பட்ட ஆவணங்கள் பதிவேற்றம் செய்யப்படாமல் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பத்தை பூர்த்தி செய்யும் போது விண்ணப்பதாரர் தவறான தகவல்களை அளித்தால் அவ்விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

ஏற்கனவே பணியில் உள்ள பணியாளர்கள் இத்தேர்வுக்கு விண்ணப்பிக்கும் போது, தங்கள் நிறுவனத்தின் உரிய அலுவலருக்கு கடிதம் மூலம் தெரிவிக்க வேண்டும் மேலும், நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படும் பட்சத்தில் உரிய அலுவலரின் தடையில்லா சான்று (NOC) பெற்று சமர்பிக்க வேண்டும்.

**5. எழுத்துத் தேர்வு**

அ) மேற்கண்ட பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு தகுதி உள்ளவர்கள் மட்டுமே எழுத்துத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். எழுத்துத் தேர்வில் கலந்து கொள்ளத் தகுதி பெற்ற நபர்களின் பட்டியல் மாவட்ட ஆள் சேர்ப்பு நிலைய இணையதளத்தில் (http://www.nlgdrb.in) வெளியிடப்படும்.

எழுத்துத் தேர்வு மாவட்டத்தின் குறிப்பிட்ட இடங்களில் நடைபெறும். எழுத்துத் தேர்வு எந்த இடத்தில் நடைபெறும் என்பது எழுத்துத் தேர்வுக்கான நுழைவுச் சீட்டில் குறிப்பிடப்படும். எழுத்துத் தேர்வு நடைபெறுவது தொடர்பான மின்னஞ்சல் (e-mail) மூலம் தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். எழுத்துத் தேர்வுக்கான நுழைவுச் சீட்டினை மாவட்ட ஆள் சேர்ப்பு நிலைய இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். நுழைவுச் சீட்டுடன் வராத விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்வில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

ஆ) எழுத்துத் தேர்வு பட்டப்படிப்பு நிலையிலான தரத்துடனும், பொது அறிவு, அடிப்படைக் கணக்கியல், கூட்டுறவுச் சட்டம் மற்றும் வங்கியியல் போன்ற பாடங்களை உள்ளடக்கியதாகவும் இருக்கும். எழுத்துத் தேர்வு கொள்குறி வகையில் (Objective type) 200 வினாக்களுடன், 170 மதிப்பெண்களுக்கானதாகவும் தேர்வுக்கான கால அளவு 180 நிமிடங்கள் கொண்டதாகவும் இருக்கும். வினாதாள் ஆங்கிலம் மற்றும் தமிழில் அச்சடிக்கப்பட்டிருக்கும்.

இ) மேற்கண்ட எழுத்துத் தேர்வுக்குரிய பாடத்திட்டங்கள் (Syllabus) மாவட்ட ஆள் சேர்ப்பு நிலைய இணைதளத்தில் வெளியிடப்படும்.

ஈ) எழுத்துத் தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின் எழுத்துத் தேர்வுக்கான வினா விடைகள் (Key answers) நீலகிரி மாவட்ட ஆள் சேர்ப்பு நிலைய இணையதளத்தில் வெளியிடப்படும். வெளியிடப்பட்ட வினா விடைகள் (Key answers) தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று தினங்களுக்குள் நீலகிரி மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையத்திற்கு எழுத்துப் பூர்வமாக அல்லது இ–மெயில் மூலமாகத் தெரிவிக்க வேண்டும். நீலகிரி மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையக் குழுக்கூட்டத்தில் அது பரிசீலிக்கப்பட்டு உரிய முடிவுகள் எடுக்கப்படும்.

**6.நேர்முகத் தேர்வு**

i) எழுத்துத் தேர்வில் வெற்றி பெற்ற விண்ணப்பதாரர்கள் நீலகிரி மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையத்தால் நடத்தப்படும் நேர்முகத் தேர்வில் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும். விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையிலும், இடஒதுக்கீடு மற்றும் இனசுழற்சி அடிப்படையிலும் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவார்கள்.

ii) நேர்முகத்தேர்வில் கலந்து கொள்ளத் தகுதி பெற்ற நபர்களின் பெயர் பட்டியல் நீலகிரிமாவட்ட ஆள் சேர்ப்பு நிலையத்தின் இணையதளம் வழியாக வெளியிடப்படும்.

iii) நேர்முகத் தேர்வு நடைபெறுவது தொடர்பான விபரங்கள் மின்னஞ்சல் (e-mail) மூலம் தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம், நாள், நேரம் ஆகிய விபரங்கள் அடங்கிய நேர்முகத் தேர்வுக்கான அழைப்புக் கடிதங்களை, தகுதி பெற்ற விண்ணப்பதாரர்கள் இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். அழைப்புக் கடிதத்துடன் வராத விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

iv)நேர்முகத்தேர்வில் கலந்து கொள்ள வரும் விண்ணப்பதாரர்களிடம் அவர்கள் எந்த வகை கூட்டுறவு நிறுவனத்திற்கு எந்த வரிசையில் ஒதுக்கீடு செய்யப்பட விரும்புகிறார்கள் என்ற முன்னுரிமை விருப்பம் (Option) பெறப்படும். நேர்முகத்தேர்வு முடிவடைந்த பின்னர், தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களை கூட்டுறவு நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்யும் போது விண்ணப்பதாரர்கள் தெரிவித்த முன்னுரிமை கவனத்தில் கொள்ளப்படும்.

v) எழுத்துத் தேர்வுக்கான மதிப்பெண் மற்றும் நேர்முகத் தேர்வுக்கான மதிப்பெண் முறையே **85 : 15** என்ற விகிதத்தில் இருக்கும்.

**7.தெரிவு செய்யப்படும் முறை**

அ) விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்விலும் நேர்முகத் தேர்விலும் பெற்ற ஒட்டுமொத்த மதிபெண்கள் அடிப்படையில் தரவரிசைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு அரசாணைப்படியான இட ஒதுக்கீடு மற்றும் இனசுழற்சி முறை பின்பற்றப்பட்டு பணியிடத்திற்கு தெரிவு செய்யப்படுவார்கள். விண்ணப்பதாரர்கள் தெரிவித்த முன்னுரிமை விருப்பமும் கவனத்தில் கொள்ளப்படும்.

மேற்குறிப்பிட்ட முறையில் விண்ணப்பதாரர்கள் கூட்டுறவு நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யும் போது அதிக மொத்த மதிப்பெண் பெற்றவர் இனசுழற்சியை பின்பற்றி அவர்கள் விருப்பம் தெரிவித்திருந்த கூட்டுறவு நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படுவர். குறைவான மதிப்பெண் பெற்றவர்களுக்கு இனசுழற்சி அடிப்படையில் அவர்கள் விரும்பிய கூட்டுறவு நிறுவனத்திற்கு ஒதுக்கீடு கிடைக்காமலும் போகலாம். அத்தகைய நேர்வில் அந்த சமயத்தில் எந்த கூட்டுறவு நிறுவனத்தில் காலிப்பணியிடம் உள்ளதோ அந்த கூட்டுறவு நிறுவனத்திற்கு அவர் ஒதுக்கீடு செய்யப்படுவார்.

ஒரு கூட்டுறவு நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட விண்ணப்பதாரர் வேறொரு கூட்டுறவு நிறுவனத்திற்கு மாற்றம் கோர இயலாது. இத்தகைய விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது.

ஆ) ஆதிதிராவிடர், அருந்ததியர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) ஆதரவற்ற விதவைகள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள், விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களில் கொடுக்கும் வயது, கல்வித்தகுதி, கூட்டுறவுப்பயிற்சித் தகுதி, சமூகப்பிரிவு, சிறப்புத் தகுதிகள் மற்றம் பிற தகுதிகள் அனைத்தையும் சரிபார்த்த பின்னர், அவற்றைப் பெறத் தகுதி உடைய விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும்.

இ) நீலகிரி மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையத்தால் தேர்வு செய்யப்படும் நபர்களுக்குத் தெரிவு மற்றும் ஒதுக்கீடு ஆணை(Selection and allotment order) மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் வழங்கப்படும். பணியமர்வு ஆணை (Appointment order) அவர்கள் ஒதுக்கீடு செய்யப்படும் கூட்டுறவு நிறுவனத்தின் தகுதி வாய்ந்த அலுவலரால் வழங்கப்படும்.

ஈ) முன்னாள் இராணுவத்தினரின் வாரிசுதாரர்களுக்கு முன்னாள் இராணுவத்தினருக்கான இடஒதுக்கீடு முறை பொருந்தாது.

உ) தெரிவு செய்யப்படும் மாற்றுத் திறனாளிகள், தங்களது குறைபாடு, தாங்கள் தெரிவு செய்யப்படும் பதவிக்குரிய பொறுப்புக்களை முழுத்திறனுடன் நிறைவேற்றுவதற்குத் தடையாக இருக்காது என்பதற்கான சான்றிதழை மருத்துவக் குழுவிடம் பெற்று சமர்பிக்க வேண்டும்.

**8. இதர நிபந்தனைகள்**

i) நேர்முகத்தேர்வில் கலந்து கொண்டு நிர்ணயிக்கப்பட்ட அனைத்த தகுதிகளையும் பூர்த்தி செய்துள்ளார் என மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையத்தால் தெரிவு செய்யப்பட்ட ஒரு விண்ணப்பதாரர் அப்பணிக்கென நிர்ணயிக்கப்பட்ட தகுதிகள் அனைத்தையும் முழுமையாகப் பெற்றிருக்கவில்லையென பின்னர் கண்டறியப்பட்டால் அவரது தெரிவு மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையத்தால் இரத்து செய்யப்படும்.

ii) நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளும் விண்ணப்பதாரர்களுக்கு அவ்வாறு நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டதை மட்டுமே காரணமாக வைத்து பணிநியமனம் கோர உரிமை கிடையாது.

iii) எழுத்துத் தேர்வுக்கு அனுமதிக்கப்படுவதால் மட்டும் ஒரு விண்ணப்பதாரர் தெரிவு செய்யக் கோரும் உரிமையுடையவராக மாட்டார்.

iv) மேற்படி பணியிடங்களுக்கான தேர்வு குறித்து ஏதேனும் முறையீடு செய்வதாயின் இறுதித்தேர்வு முடிவு வெளியிடப்பட்ட 90 நாட்களுக்குள் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத் தலைவரிடம் உரிய காரணங்களுடன் மேல் முறையீடு செய்ய வேண்டும். அதற்குப் பின் பெறப்படும் முறையீடுகள் ஏற்கப்படமாட்டாது.

v) மேலே குறிப்பிட்டுள்ள காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை இறதி நேர மாறுதலுக்குட்பட்டது.

vi) காரணம் எதுவும் தெரிவிக்காமல் இந்த அறிவிக்கையை இரத்து செய்வதற்கு/ திரும்பப் பெறுவதற்கு / திருத்துவதற்கு / கெடு தேதியை நீட்டிப்பதற்கு நீலகிரி மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையத்திற்கு உரிமையுண்டு.

vii) விண்ணப்பதாரர்கள் அவர்களது சொந்த நலன் கருதி அவர்களது விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு முன்பாக "விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகளை" கவனமாகப் படித்து தேர்வு செய்யப்படுவதற்குரிய நிபந்தனைகளைப் புரிந்து கொள்ளவேண்டும்.

viii) விண்ணப்பதாரர்கள் தேர்வுக்கு விண்ணப்பிப்பதற்காக கொடுக்கப்பட்டுள்ள கடைசி நாள் வரை காத்திருக்காமல் அதற்கு முன்னரே போதிய கால அவகாசத்தில் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ஏனெனில் கடைசி நாளில் அதிகப்படியான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்க நேரும் போது, விண்ணப்பம் பதிவேற்றலில் தாமதமோ அல்லது தொழில்நுட்பச் சிக்கல்களோ எழ வாய்ப்புள்ளது.

மேற்கூறிய தொழில் நுட்பக் காரணங்களால் அல்லது வேறு காரணங்களால் விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களைக் கடைசி நேரத்தில் சமர்ப்பிக்க இயலாது போனால் அதற்கு மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம் பொறுப்பேற்காது.

ix) விண்ணப்பத்தினை சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் மற்றும் நேரத்திற்குப் பிறகு ஆன்லைன் மூலம் விண்ணப்பம் செய்வதற்கான வசதி நிறுத்தம் செய்யப்படும்.

x) இந்த அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள காலிப்பணியிடங்களை நிரப்பும் பணி தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் மாண்பமை உயர்நீதிமன்றத்தின் நீதிப்பேராணையில் வழங்கப்படும் இறுதித் தீர்ப்புகுட்பட்டதாகும்.

xi) விண்ணப்பகட்டணம் செலுத்தியது தொடர்பான பிரச்சனை குறித்து ஏதேனும் முறையீடு செய்வதாயின் அப்பிரச்சனை ஏற்பட்ட மூன்று நாட்களுக்குள் நீலகிரி மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையத்திடம் உரிய காரணங்களுடன் முறையீடு செய்ய வேண்டும். அதற்குப் பின் பெறப்படும் முறையீடுகள் ஏற்கப்பட மாட்டாது.

x) கூடுதல் விபரங்கள் அல்லது சந்தேகங்களுக்கு 0423–2442586ல் உள்ள உதவிமையத்தையோ அல்லது nlgdrb2019@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியையோ தொடர்பு கொள்ளலாம்.

உதகமண்டலம்
26.08.2019

இணைப்பதிவாளர்
தலைவர்
கூட்டுறவுச் சங்கங்களின்
நீலகிரி மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம்
உதகமண்டலம்.

# கூட்டுறவுச் சங்கங்களின்
# மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம்,
# நீலகிரி மாவட்டம்

முகவரி : பிளாக் – IV மாவட்ட ஆட்சியர் அலுவலக கூடுதல் வளாகம், பிங்கர் போஸ்ட், உதகமண்டலம். நீலகிரி மாவட்டம் – 643 006

இணையதள முகவரி: **http://www.nlgdrb.in**

மின்னஞ்சல் முகவரி: **nlgdrb2019@gmail.com**

**விளம்பரஎண்:2/2019** **நாள்: 26.08.2019**

நீலகிரி மாவட்டத்தில், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டில் செயல்படும் நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் காலியாக உள்ள உதவியாளர் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்புவதற்காக இந்திய குடியுரிமையுடைய, கீழ்காணும் தகுதி பெற்ற ஆண்/பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் http://www.nlgdrb.in என்ற இணையதள முகவரியில் மட்டுமே (Online) 05.10.2019 பிற்பகல் 5.45 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

| வ.எண் | கூட்டுறவு நிறுவனத்தின் பெயர் | பதவி | காலிப் பணியிட எண்ணிக்கை | பணியிடத்திற்கான சம்பள விகிதம் (தற்போதுள்ளபடி) குறைந்தபட்சம், அதிகபட்சம் |
|---|---|---|---|---|
| 1. | நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிட்., | உதவியாளர் | 32 | ரூ.14000–850/5–18250–950/2–20150–1000/7–27150–1225/2–29600–1450/4–35400–1500/7–45900–1600/1–47500 (1+28 stages) |

**<u>ஒட்டுமொத்த 32 பணியிடங்களக்கான வகுப்புவாரி ஒதுக்கீடு</u>**

| | | |
|---|---|---|
| பொதுப்பிரிவு | : | 10 |
| பிற்படுத்தப்பட்டோர் | : | 08 |
| மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் | : | 06 |
| பிற்படுத்தப்பட்டோர்(முஸ்லீம்) | : | 01 |
| ஆதி திராவிடர் | : | 06 |
| ஆதிதிராவிடர் (அருந்ததியினர்) | : | 01 |

குறிப்பு:—

1) காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை மாறுதலுக்குட்பட்டது.

2) இத்தெரிவிற்கு, நடைமுறையில் உள்ள தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வுக்கு பின்பற்றப்படும் இடஒதுக்கீடு மற்றும் இனசுழற்சி முறை ஒட்டுமொத்த நியமனத்திற்கும் பின்பற்றப்படும்.

3) ஆதரவற்ற விதவை மற்றும் முன்னாள் இராணுவத்திற்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட காலிப்பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணிநிபந்தனைகள்) சட்டம் 2016, சட்டப்பிரிவு 26(2) மற்றும் 27(சி) ஆகியவற்றிற்கு உட்பட்டு நிரப்பப்படும்.

அ. மேற்படி சம்பள விகிதம் மற்றும் இதரப் படிகள் மேற்குறிப்பிட்ட கூட்டுறவு சங்கத்தின் பணியாளர் பணிநிலை குறித்த சிறப்புத் துணை விதிகளுக்குட்பட்டு அமையும்.

ஆ. தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நீலகிரிமாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் பணியாளர் துணைவிதிகளுக்குட்பட்டு பணியாற்ற வேண்டும்.

இ. தேர்வில் கலந்து கொள்ளும் போது கடைபிடிக்கப்பட வேண்டிய விதிமுறைகள் குறித்த விபரங்கள் தேர்வு நுழைவுச் சீட்டில் தெரிவிக்கப்படும்.

**1.முக்கிய நாட்களும் நேரமும்:**

| | | |
|---|---|---|
| 1. | பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பதிவேற்றம் செய்யப்பட வேண்டிய கடைசி நாள் | 05.10.2019 பிற்பகல் 5.45 மணி வரை |
| 2. | எழுத்துத் தேர்வு நடைபெறும் நாள் | 23.11.2019 முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை |

**தகுதிகள்:**

**அ. வயது**

i) விண்ணப்பதாரர் 18 வயது பூர்த்தியடைந்தவராக இருக்க வேண்டும் (அதாவது 01.01.2001 அன்றோ அதற்கு முன்னரோ பிறந்தவராக இருக்க வேண்டும்).

ii) விண்ணப்பதாரர்கள் 01.01.2019 அன்று கீழ் கண்ட வயதினை பூர்த்தி செய்தவராக இருக்கக் கூடாது.

| | | |
|---|---|---|
| 1) | ஆதி திராவிடர், அருந்ததியர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) மற்றும் இவ்வகுப்புகளை சார்ந்த முன்னாள் இராணுவத்தினர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் | வயது வரம்பு இல்லை |
| 2) | பிற வகுப்பினர் (OC) | 30 வயதுக்கு மிகாமல் இருக்க வேண்டும். |
| 3) | அனைத்து இனத்தைச் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் | வயது வரம்பு இல்லை |
| 4) | பிற வகுப்பினைச்(OC) சார்ந்த முன்னாள் இராணுவத்தினர் | 48 வயது மிகாமல் |
| 5) | பிற வகுப்பினைச்(OC) சார்ந்த மாற்றுத் திறனாளிகள் | 40 வயது மிகாமல் |

**ஆ) கல்வித் தகுதி :** ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு (Any Degree ) (10+2+3 pattern) மற்றும் கூட்டுறவுப் பயிற்சி

- பல்கலைக் கழகங்களால் வழங்கப்படும் பட்டப்படிப்பிற்குப் பதிலாக, பதினைந்து ஆண்டுகள் இராணுவத்தில் பணிபுரிந்தவர்களுக்கு இராணுவத்தால் வழங்கப்படும் பட்டப்படிப்பு சான்றிதழ் பெற்றுள்ள முன்னாள் இராணுவத்தினர்களும் விண்ணப்பிக்கலாம். ஆனால் அவர்கள் பள்ளி இறுதித் தேர்விலும் (SSLC) மேல்நிலைக் கல்வியிலும் (HSC) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

- கூட்டுறவுப் பயிற்சி பெற்றவர்கள் மற்றும் 2019–2020 ஆம் ஆண்டில் கூட்டுறவு மேலாண்மை நிறுவனங்களின் வாயிலாகவோ, தொலைதூரக்கல்வி வாயிலாகவோ அல்லது நேரடியாகவோ கூட்டுறவுப் பட்டயப்பயிற்சி பயின்றுவரும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.கூட்டுறவுப்பயிற்சி பெற்று வரும் விண்ணப்பதாரர்கள் இத்தேர்வுக்கு விண்ணப்பிக்கும் போது அவர்கள் கூட்டுறவு பட்டயப்படிப்பு படித்து வருவதற்கான (Bonafide Certificate) சம்பந்தப்பட்ட கல்வி நிலையத்தின் சான்றுடன் விண்ணப்பிக்கலாம். கூட்டுறவுப் பயிற்சி குறித்த விரிவான விபரங்கள் அடங்கிய பதிவாளர் அவர்களின் சுற்றறிக்கை எண் 29/2013 நாள் 18.07.2013 நீலகிரி மாவட்ட ஆள் சேர்ப்பு நிலைய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

- விண்ணப்பதாரர்கள் பள்ளி இறுதி வகுப்பு அல்லது மேல்நிலைப் படிப்பு அல்லது பட்டப்படிப்பின் போது தமிழ் மொழியை ஒரு பாடமாக படித்துத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

- கணிணிப் பயன்பாட்டில் அடிப்படை அறிவு பெற்றிருத்தல் வேண்டும்.

**இ) பொது**

- விண்ணப்பதாரர்கள் பிற மாநிலத்தவர்களாக இருக்கும் பட்சத்தில் அவர்கள் எந்த வகுப்பை சார்ந்தவர்களாக இருப்பினும் பிற வகுப்பினராகவே (OC) கருதப்படுவர்.

- "ஆதரவற்ற விதவை" என்பது அனைத்து வகையிலிருந்தும் பெறும் மொத்த மாத வருமானம் ரூ.4000/–க்கும் (ரூபாய் நான்காயிரம் மட்டும்) குறைவாகப் பெறுகின்ற ஒரு விதவையைக் குறிப்பதாகும். இவ்வருமானம், குடும்ப ஓய்வூதியம் அல்லது தொழிற்கல்வி பெற்றவர்களின் சுயதொழில் ஈட்டும் வருமானம் உள்ளிட்ட மற்ற வருமானங்கள் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும். இத்தகைய விண்ணப்பதாரர்கள் உரிய வருவாய் கோட்டாட்சியரிடமிருந்து நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் சான்றிதழைப் பெற்று சமர்ப்பிக்க வேண்டும். விவாகரத்துப் பெற்றவர், கணவனால் கைவிடப்பட்டவர் ஆதரவற்ற விதவையாகக் கருதப்படமாட்டார். மறுமணம் புரிந்தவர் ஆதரவற்ற விதவையாகக் கருதப்படமாட்டார்.

**3. விண்ணப்ப கட்டணம் :**

அ) விண்ணப்ப பதிவு மற்றும் எழுத்துத் தேர்வுக்கான கட்டணம் ரூ.250/– ஆகும்.

ஆதி திராவிடர், பழங்குடியினர், அனைத்துப் பிரிவையும் சார்ந்த மாற்றுத்திறனாளிகள், அனைத்துப் பிரிவையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் ஆகியோருக்கு இக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள மாற்றுத் திறனாளிகள், மாற்றுத்திறனாளிகள் துறை அலுவலரிடமிருந்து சான்றிதழும், மருத்துவ சான்றிதழும் பெற்றிருக்க வேண்டும். ஆதரவற்ற விதவைகள் வருவாய் கோட்டாட்சியரிடமிருந்து (RDO) சான்று பெற்றிருக்க வேண்டும்.

**அகல்நிலை (Offline)**

மேற்படிக்கட்டணம், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் தலைமையகம் அல்லது கிளைகளில் நேரடியாக செலுத்தப்பட்டு, அவ்வாறு செலுத்தப்பட்ட விண்ணப்பக் கட்டண இரசீதில் (Candidates copy of the chalan) உள்ள Journel ID என்ற எண்ணை விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்தில் அதற்கென்று ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் குறிப்பிட்டு விண்ணப்பக் கட்டணம் செலுத்திய இரசீதை (Candidates Copy of the pay- in-slip) scan செய்து பதிவேற்றம் (upload) செய்ய வேண்டும்.

**நிகல்நிலை (Online)**

தேர்வுக் கட்டணத்தை online மூலம் State Bank of India இணையதளத்தில் உள்ள "SBI Collect" என்ற சேவையைப் பயன்படுத்தியும் செலுத்தலாம். "SBI Collect"என்ற சேவையைப் பயன்படுத்தி விண்ணப்ப கட்டணம் செலுத்துவதற்கான வசதி (Link to the "SBI Collect" service in the State Bank of India online payment portal) நீலகரி மாவட்ட ஆள் சேர்ப்பு நிலைய இணையதளத்திலும் கொடுக்கப்பட்டிருக்கும். Online மூலம் மேற்குறிப்பிட்டவாறு விண்ணப்பக் கட்டணத்தை செலுத்தி முடித்த பின்னர் திரையில் தோன்றும் இரசீதினை பிரிண்ட் எடுத்துக் கொள்வதுடன் அங்கே திரையில் தோன்றும் DUA—எனத் தொடங்கும் எண்ணை (SBI Collect Reference Number) குறித்து வைத்துக் கொண்டு அந்த எண்ணை விண்ணப்பத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் குறிப்பிட வேண்டும்.

**இணையவழி கட்டணம் செலுத்தும் போது ஏற்படும் இடர்பாடுகளுக்கும் தோல்விகளுக்கும் மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம் பொறுப்பேற்காது.**

ஆ) மேற்கண்ட நடைமுறைகளைப் பின்பற்றி Online மூலம் பணம் செலுத்தும் விண்ணப்பதாரர்கள் DUA … எண்ணை பிறரிடம் பகிரக் கூடாது. அதேபோல் மத்திய கூட்டுறவு வங்கியின் Journel ID ஐ பிறரிடம் பகிரக் கூடாது. ஒரே DUA … எண்/ Journel ID எண் ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்களில் இருந்தால் அந்த விண்ணப்பங்கள் அனைத்தும் நிராகரிக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை http://www.nlgdrb.in என்ற இணையதளம் மூலம் **05.10.2019 மாலை 5.45 மணிவரை** பதிவேற்றம் செய்யலாம்.

இ) கட்டணம் செலுத்தும் முறையை எந்த நேரத்திலும் மாற்றியமைக்கும் உரிமை நீலகிரி மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையத்திற்கு உண்டு.

ஈ) ஒருமுறை செலுத்தப்பட்ட விண்ணப்பக் கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

**4) விண்ணப்பிக்கும் முறை**

அறிவிக்கப்பட்டுள்ள காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்ப படிவம் http://www.nlgdrb.in என்ற இணையதளம் மூலம் மட்டுமே பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்யும் முன் கீழ்கண்டவற்றை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

அ) விண்ணப்பப்படிவங்கள் இணையதளம் மூலம் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

ஆ) விண்ணப்ப படிவங்களுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவைகளும் அவற்றிற்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் ஸ்கேன் செய்யப்பட்டு பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

i) விண்ணப்பதாரரின் புகைப்படம் – 200kb அளவுக்கு மிகாமல் (jpeg or jpg format)

ii) விண்ணப்பதாரரின் கையொப்பம் – 50kb அளவுக்கு மிகாமல் (jpeg or jpg format)

iii) விண்ணப்பதாரரின் சாதி சான்றிதழ் – 200kb அளவுக்கு மிகாமல் (pdf file)

iv) மாற்றுத் திறானளிச் சான்றிதழ் (மாற்றுத் திறனாளிகள் மட்டும்) – 200kb அளவுக்கு மிகாமல் (pdf file)

v) ஆதரவற்ற விதவை சான்றிதழ் (ஆதரவற்ற விதவைகள் மட்டும்) – 200kb அளவுக்கு மிகாமல் (pdf file)

vi) கூட்டுறவு பட்டயப் பயிற்சி சான்றிதழ் – 200kb அளவுக்கு மிகாமல் (pdf file)

vii) மத்திய கூட்டுறவு வங்கி மூலம் செலுத்தப்பட்ட விண்ணப்பக் கட்டண இரசீது (Candidates Copy of the pay- in- slip) - 100kb அளவுக்கு மிகாமல் (jpeg or jpg format)

viii) கல்வித் தகுதி குறித்த சான்றிதழ்கள் 200 kb (pdf file)

ix) முன்னாள் இராணுவத்தினர் என்பதற்கான சான்று

x) தமிழ் வழியில் கல்வி கற்றதற்கான சான்று (Certificate for studied in Tamil Medium)

மேற்குறிப்பிட்ட ஸ்கேன் செய்யப்பட்ட ஆவணங்கள் பதிவேற்றம் செய்யப்படாமல் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பத்தை பூர்த்தி செய்யும் போது விண்ணப்பதாரர் தவறான தகவல்களை அளித்தால் அவ்விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

ஏற்கனவே பணியில் உள்ள பணியாளர்கள் இத்தேர்வுக்கு விண்ணப்பிக்கும் போது, தங்கள் நிறுவனத்தின் உரிய அலுவலருக்கு கடிதம் மூலம் தெரிவிக்க வேண்டும் மேலும், நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படும் பட்சத்தில் உரிய அலுவலரின் தடையில்லா சான்று (NOC) பெற்று சமர்பிக்க வேண்டும்.

**5. எழுத்துத் தேர்வு**

அ) மேற்கண்ட பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு தகுதி உள்ளவர்கள் மட்டுமே எழுத்துத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். எழுத்துத் தேர்வில் கலந்து கொள்ளத் தகுதி பெற்ற நபர்களின் பட்டியல் மாவட்ட ஆள் சேர்ப்பு நிலைய இணையதளத்தில் (http://www.nlgdrb.in) வெளியிடப்படும்.

எழுத்துத் தேர்வு மாவட்டத்தின் குறிப்பிட்ட இடங்களில் நடைபெறும். எழுத்துத் தேர்வு எந்த இடத்தில் நடைபெறும் என்பது எழுத்துத் தேர்வுக்கான நுழைவுச் சீட்டில் குறிப்பிடப்படும். எழுத்துத் தேர்வு நடைபெறுவது தொடர்பான மின்னஞ்சல் (e-mail) மூலம் தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். எழுத்துத் தேர்வுக்கான நுழைவுச் சீட்டினை நீலகிரி மாவட்ட ஆள் சேர்ப்பு நிலைய இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். நுழைவுச் சீட்டுடன் வராத விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்வில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

ஆ) எழுத்துத் தேர்வு பட்டப்படிப்பு நிலையிலான தரத்துடனும், பொது அறிவு, அடிப்படைக் கணக்கியல், கூட்டுறவுச் சட்டம் மற்றும் வங்கியியல் போன்ற பாடங்களை உள்ளடக்கியதாகவும் இருக்கும். எழுத்துத் தேர்வு கொள்குறி வகையில் (Objective type) 200 வினாக்களுடன், 170 மதிப்பெண்களுக்கானதாகவும் தேர்வுக்கான கால அளவு 180 நிமிடங்கள் கொண்டதாகவும் இருக்கும். வினாதாள் ஆங்கிலம் மற்றும் தமிழில் அச்சடிக்கப்பட்டிருக்கும்.

இ) மேற்கண்ட எழுத்துத் தேர்வுக்குரிய பாடத்திட்டங்கள் (Syllabus) நீலகிரி மாவட்ட ஆள் சேர்ப்பு நிலைய இணைதளத்தில் வெளியிடப்படும்.

ஈ) எழுத்துத் தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின் எழுத்துத் தேர்வுக்கான வினா விடைகள் (Key answers) நீலகிரி மாவட்ட ஆள் சேர்ப்பு நிலைய இணையதளத்தில் வெளியிடப்படும். வெளியிடப்பட்ட வினா விடைகள் (Key answers) தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று தினங்களுக்குள் நீலகிரி மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையத்திற்கு எழுத்துப் பூர்வமாக அல்லது இ–மெயில் மூலமாகத் தெரிவிக்கலாம். நீலகிரி மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையக் குழுக்கூட்டத்தில் அது பரிசீலிக்கப்பட்டு உரிய முடிவுகள் எடுக்கப்படும்.

**6.நேர்முகத் தேர்வு**

i) எழுத்துத் தேர்வில் வெற்றி பெற்ற விண்ணப்பதாரர்கள் நீலகிரி மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையத்தால் நடத்தப்படும் நேர்முகத் தேர்வில் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும். விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையிலும், இடஒதுக்கீடு மற்றும் இனசுழற்சி அடிப்படையிலும் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவார்கள்.

ii) நேர்முகத்தேர்வில் கலந்து கொள்ளத் தகுதி பெற்ற நபர்களின் பெயர் பட்டியல் நீலகிரி மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையத்தின் இணைதளம் வழியாக வெளியிடப்படும்.

iii) நேர்முகத் தேர்வு நடைபெறுவது தொடர்பான விபரங்கள் மின்னஞ்சல் (e-mail) மூலம் தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம், நாள், நேரம் ஆகிய விபரங்கள் அடங்கிய நேர்முகத் தேர்வுக்கான அழைப்புக் கடிதங்களை, தகுதி பெற்ற விண்ணப்பதாரர்கள் இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். அழைப்புக் கடிதத்துடன் வராத விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

iv) எழுத்துத் தேர்வுக்கான மதிப்பெண் மற்றும் நேர்முகத் தேர்வுக்கான மதிப்பெண் முறையே 85 : 15 என்ற விகிதத்தில் இருக்கும்.

**7.தெரிவு செய்யப்படும் முறை**

அ) விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்விலும் நேர்முகத் தேர்விலும் பெற்ற ஒட்டுமொத்த மதிபெண்கள் அடிப்படையில் தரவரிசைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு அரசாணைப்படியான இட ஒதுக்கீடு மற்றும் இனசுழற்சி முறை பின்பற்றப்பட்டு பணியிடத்திற்கு தெரிவு செய்யப்படுவார்கள்.

ஆ) ஆதிதிராவிடர், அருந்ததியர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) ஆதரவற்ற விதவைகள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள், விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களில் கொடுக்கும் வயது, கல்வித்தகுதி, கூட்டுறவுப்பயிற்சித் தகுதி, சமூகப்பிரிவு, சிறப்புத் தகுதிகள் மற்றம் பிற தகுதிகள் அனைத்தையும் சரிபார்த்த பின்னர், அவற்றைப் பெறத் தகுதி உடைய விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும்.

இ) நீலகிரி மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையத்தால் தேர்வு செய்யப்படும் நபர்களுக்குத் தெரிவு மற்றம் ஒதுக்கீடு ஆணை(Selection and allotment order) நீலகிரி மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் வழங்கப்படும். பணியமர்வு ஆணை (Appointment order) மாவட்ட மத்திய கூட்டுறவு நிறுவனத்தின் தகுதி வாய்ந்த அலுவலரால் வழங்கப்படும்.

ஈ) முன்னாள் இராணுவத்தினரின் வாரிசுதாரர்களுக்கு முன்னாள் இராணுவத்தினருக்கான இடஒதுக்கீடு முறை பொருந்தாது.

உ) தெரிவு செய்யப்படும் மாற்றுத் திறனாளிகள், தங்களது குறைபாடு, தாங்கள் தெரிவு செய்யப்படும் பதவிக்குரிய பொறுப்புக்களை முழுத்திறனுடன் நிறைவேற்றுவதற்குத் தடையாக இருக்காது என்பதற்கான சான்றிதழை மருத்துவக் கழுவிடம் பெற்று சமர்பிக்க வேண்டும்.

**8. இதர நிபந்தனைகள்**

i) நேர்முகத்தேர்வில் கலந்து கொண்டு நிர்ணயிக்கப்பட்ட அனைத்த தகுதிகளையும் பூர்த்தி செய்துள்ளார் என நீலகிரி மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையத்தால் தெரிவு செய்யப்பட்ட ஒரு விண்ணப்பதாரர் அப்பணிக்கென நிர்ணயிக்கப்பட்ட தகுதிகள் அனைத்தையும் முழுமையாகப் பெற்றிருக்கவில்லையென பின்னர் கண்டறியப்பட்டால் அவரது தெரிவு நீலகிரி மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையத்தால் இரத்து செய்யப்படும்.

ii) நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளும் விண்ணப்பதாரர்களுக்கு அவ்வாறு நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டதை மட்டுமே காரணமாக வைத்து பணிநியமனம் கோர உரிமை கிடையாது.

iii) எழுத்துத் தேர்வுக்கு அனுமதிக்கப்படுவதால் மட்டும் ஒரு விண்ணப்பதாரர் தெரிவு செய்யக் கோரும் உரிமையுடையவராக மாட்டார்.

iv) மேற்படி பணியிடங்களுக்கான தேர்வு குறித்து ஏதேனும் முறையீடு செய்வதாயின் இறுதித்தேர்வு முடிவு வெளியிடப்பட்ட 90 நாட்களுக்குள் நீலகிரி மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத் தலைவரிடம் உரிய காரணங்களுடன் மேல் முறையீடு செய்ய வேண்டும். அதற்குப் பின் பெறப்படும் முறையீடுகள் ஏற்கப்படமாட்டாது.

v) மேலே குறிப்பிட்டுள்ள காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை இறுதி நேர மாறுதலுக்குட்பட்டது.

vi) காரணம் எதுவும் தெரிவிக்காமல் இந்த அறிவிக்கையை இரத்து செய்வதற்கு / திரும்பப் பெறுவதற்கு / திருத்துவதற்கு / கெடு தேதியை நீட்டிப்பதற்கு நீலகிரி மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையத்திற்கு உரிமையுண்டு.

vii) விண்ணப்பதாரர்கள் அவர்களது சொந்த நலன் கருதி அவர்களது விண்ணப்பத்தினை சமர்ப்பிப்பதற்கு முன்பாக "விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகளை" கவனமாகப் படித்து தேர்வு செய்யப்படுவதற்குரிய நிபந்தனைகளைப் புரிந்து கொள்ளவேண்டும்.

viii) விண்ணப்பதாரர்கள் தேர்வுக்கு விண்ணப்பிப்பதற்காக கொடுக்கப்பட்டுள்ள கடைசி நாள் வரை காத்திருக்காமல் அதற்கு முன்னரே போதிய கால அவகாசத்தில் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ஏனெனில் கடைசி நாளில் அதிகப்படியான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்க நேரும் போது, விண்ணப்பம் பதிவேற்றலில் தாமதமோ அல்லது தொழில்நுட்பச் சிக்கல்களோ எழ வாய்ப்புள்ளது.

மேற்கூறிய தொழில் நுட்பக் காரணங்களால் அல்லது வேறு காரணங்களால் விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களைக் கடைசி நேரத்தில் சமர்ப்பிக்க இயலாது போனால் அதற்கு நீலகிரி மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம் பொறுப்பேற்காது.

ix) விண்ணப்பத்தினை சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் மற்றும் நேரத்திற்குப் பிறகு ஆன்லைன் மூலம் விண்ணப்பம் செய்வதற்கான வசதி நிறுத்தம் செய்யப்படும்.

x) இந்த அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள காலிப்பணியிடங்களை நிரப்பும் பணி தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் மாண்பமை உயர்நீதிமன்றத்தின் நீதிப்பேராணையில் வழங்கப்படும் இறுதித் தீர்ப்புகுட்பட்டதாகும்.

xi) விண்ணப்பகட்டணம் செலுத்தியது தொடர்பான பிரச்சனை குறித்து ஏதேனும் முறையீடு செய்வதாயின் அப்பிரச்சனை ஏற்பட்ட மூன்று நாட்களுக்குள் நீலகிரி மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையத்திடம் உரிய காரணங்களுடன் முறையீடு செய்ய வேண்டும். அதற்குப் பின் பெறப்படும் முறையீடுகள் ஏற்கப்பட மாட்டாது.

x) கூடுதல் விபரங்கள் அல்லது சந்தேகங்களுக்கு **0423–2442586**ல் உள்ள உதவிமையத்தையோ அல்லது **nlgdrb2019@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரியையோ தொடர்பு கொள்ளலாம்.

உதகமண்டலம்
**26.08.2019**

இணைப்பதிவாளர்
தலைவர்
கூட்டுறவுச் சங்கங்களின்
நீலகிரி மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம்
உதகமண்டலம்.